# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா: ஒளவையார் எழுதிய நூல்களில் ஒன்று மூதுரை .

(திருக்குறள், மூதுரை, சிலப்பதிகாரம்)

01. ஆங்கிலேயருடன் போர்புரிந்த தமிழ் மன்னன் ________________ .

(சங்கிலியன், எல்லாளன், பண்டாரவன்னியன்)

02. 70 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

(எலுபது, எழுபது, எளுபது)

03. பரிசு நகரத்தின் மத்தியில் நெப்போலியன் கட்டிய

________________ உள்ளது.

(நொற்றடாம், எஃபெயில்கோபுரம், வெற்றிவளைவு)

04. **"தமிழுக்கு அமுதென்று பெயர்"** என்ற பாடலைப் பாடியவர்

________________ .

(பாரதியார், பாரதிதாசன், சோமசுந்தரப்புலவர்)

05. **பழமொழி :-** சிறு துளி பெரு ________________ .

(வெல்லம், வெள்ளம் , வெழ்ழம்)

06. தீமை கண்டு அஞ்சாது நிற்பது ________________ .

(அச்சம், அன்பு, வீரம்)

07. உடற்பயிற்சி என்பதைப் பிரித்தால் ________________ .

(உடற் + பயிற்சி, உடப் + பயிற்சி, உடல் + பயிற்சி)

08. காட்டில் அதியமான் ஒரு ________________ மரத்தைக் கண்டான்.

(மா, நெல்லி, பலா)

09. நீண்ட பள்ளி விடுமுறை விடப்படும் காலம் ________________ .

(பனிகாலம், இலை உதிர்காலம், கோடைகாலம்)

10. பனையிலிருந்து கிடைப்பது ________________ .

(இளநீர், நுங்கு, தேங்காய்)

11. பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுத்தவன் ________________ .

(கதிர்காமநாயகம், வன்னியத்தேவன், எட்டப்பன்)

12. நட்பு என்பதன் எதிர்க்கருத்து ________________ .

(விருப்பு, அன்பு, பகை )

13. முல்லை + கொடி என்பதைச் சேர்த்தால் ________________ .

(முல்லைக்கொடி, முல்லைய்க்கொடி, முல்லைகொடி)

14. நான் வாங்கினேன். நீ ________________ .

(வாங்கினாய், வாங்கினார், வாங்கினேன்)

15. வானொலியைக் கண்டுபிடித்தவர் ________________ .

(மார்க்கோனி, எடிசன் , கிரகம்பெல் )

16. அன்னம் நீந்தியது. அன்னங்கள் ________________ .

(நீந்தின, நீந்துகின்றன, நீந்துகின்றது)

17. தேன்மொழியின் சலங்கை ________________ என ஒலித்தது.

(கலீர்கலீர், படபட, நறநற)

18. உலகச் செய்திகளைக் காணவும் கேட்கவும் உதவுவது

__________________ .

(தொலைக்காட்சி, வானொலி, தொலைநோக்கி)

19. சோமசுந்தரப்புலவர் பிறந்த ஊர் __________________ .

(கொக்குவில், நவாலி, அளவெட்டி)

20. அம்மாவால் சட்டை __________________ .

(தைத்தார், தைக்கப்பட்டது, தைப்பார்)

புள்ளிகள் 20

2) உறுப்பமைய எழுதுக.

தமிழை என்னுயிர் என்பேன்.

________________________________________________________

புள்ளிகள் 03

## 3) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| சாக்குப்போக்கு | முன்னும் பின்னும் | மளமள |
| ஆடிப்பாடி | ~~ஊண் உறக்கம்~~ | சொர சொர |

**எ+கா:**

அப்பா ஊண் உறக்கம் இன்றி வேலை செய்கிறார்.

1. உழவனின் கை ____________ என இருந்தது.

2. இளநிலா வீட்டுப்பாடத்தை ____________ என்று செய்து முடித்தாள்.

3. பள்ளிக்கு வராத மாணவன் ஆசிரியரிடம் ____________ ச் சொன்னான்.

4. பாட்டன் ____________ பார்த்து நடந்தார்.

5. கலைவிழாவில் மாணவர்கள் ____________ மகிழ்ந்தனர்.

புள்ளிகள் 05

## 4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேடி | சமைத்த | நீளமாக | முதலாவது | அன்பாக | ~~படித்த~~ |

**எ+கா:**

நான் ___படித்த___ நூல்களில் சிறந்தது திருக்குறள்.

1. யானையின் தும்பிக்கை ______________ இருக்கும்.

2. கவியா ஓட்டப் போட்டியில் ______________ இடத்தைப் பெற்றாள்.

3. பாட்டி என்மீது ______________ இருப்பார்.

4. அக்கா ______________ உணவு சுவையாக இருந்தது.

5. மான் தனது குட்டியைத் ______________ ஓடியது.

புள்ளிகள் 05

## 5) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.

**எ+கா:**

தாய் தனது குழந்தையைக் கட்டி அணைத்தார்.

**பழமொழி :-**

1. விளையும் பயிரை முளையில் ______________________.

2. கனிமொழி நாளை பாட்டியின் ஊருக்குச் ______________________.

3. நாம் கற்பதைப் பிழை இல்லாமல் கற்க ______________________.

4. நான் நேற்று நண்பியுடன் சேர்ந்து படம் ______________________.

5. தமிழை முத்தமிழ் எனச் சிறப்பித்துக் ______________________.

6. அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனியைக் ______________________.

புள்ளிகள் 12

6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | ண் | டி | ந | ல் | வ | ழி |
| ம | ந | ல் | லூ | ர் | தி | ந |
| ணி | சி | ம | நா | பு | ரு | வா |
| மே | லா | ன் | ல | ற | க் | லி |
| க | ப | னா | டி | நா | கு | மூ |
| லை | ம் | ர் | யா | னூ | ற | து |
| வ | ன் | னி | ர் | று | ள் | றை |

| இடங்கள் | நூல்கள் |
|---|---|
| எ+கா: நவாலி | நல்வழி |
| 1. ______ | 1. ______ |
| 2. ______ | 2. ______ |
| 3. ______ | 3. ______ |
| 4. ______ | 4. ______ |
| 5. ______ | 5. ______ |

புள்ளிகள் 10

**7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| ஆடிக்கூழ் | புலவர் | பாடலில் |
| ஆடி | ~~ஆடிப்பிறப்பும்~~ | கொழுக்கட்டை |

தமிழரின் கொண்டாட்டங்களில் சிறந்தவை ஆடிப்பிறப்பும் தைப்பொங்கலும் ஆகும். ஆடிப்பிறப்பு ____________ மாதம் கொண்டாடப்படும் . ஆடிப்பிறப்பன்று ____________ அவிப்பர். மாலையில் ____________ காய்ச்சிக் கூடி இருந்து குடிப்பர். சோமசுந்தரப் ____________ ஆடிக்கூழ் என்ற ____________ ஆடிப்பிறப்பின் சிறப்பைப் பற்றிப் பாடியுள்ளார்.

| புள்ளிகள் 10 |
|---|

## 8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.

**எ+கா:**

உண்டு / ஏழு / வானவில்லில் / நிறங்கள்

வானவில்லில் ஏழு நிறங்கள் உண்டு.

1. மயில் / அழகான / பறவை / ஓர்

   ______________________________.

2. கூறுவர் / திருக்குறளைப் / என்றும் / பொதுமறை

   ______________________________.

3. பாடுவார் / பாட்டுப் / தாலாட்டுப் / அம்மா

   ______________________________.

4. இனிமையாக / கூத்துப் / இருக்கும் / பாடல்கள்

   ______________________________.

5. ஒரு / உடற்பயிற்சி / நீச்சல் / சிறந்த

   ______________________________.

புள்ளிகள் 10

## 9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கோடை காலம் சிறுவருக்குப் பிடித்த காலம். கோடைகாலத்தில் மரங்கள் பசுமையாகக் காட்சி அளிக்கும். எங்கும் பல வண்ணப் பூக்கள் பூத்திருக்கும். எல்லோரும் கடற்கரைக்கு விரும்பிச் செல்வர். சிறுவர் கடலில் நீந்தி மகிழ்வர். குழந்தைகள் மணல்வீடு கட்டி விளையாடுவர். சிறுவர் கோடைகாலத்தில் பூங்காவிற்குச் செல்வர். பூங்காவில் ஊஞ்சல் ஆடி மகிழ்வர்.

**எ+கா:**

கோடைகாலம் யாருக்குப் பிடித்த காலம்?

கோடைகாலம் சிறுவருக்குப் பிடித்த காலம்.

1. கோடைகாலத்தில் எவை பசுமையாகக் காட்சி அளிக்கும்?

   ______________________________.

2. எல்லோரும் எங்கே விரும்பிச் செல்வர்?

   ______________________________.

3. சிறுவர் எதில் நீந்தி மகிழ்வர்?

   ______________________________.

4. குழந்தைகள் என்ன கட்டி விளையாடுவர்?

   ______________________________.

5. சிறுவர் கோடை காலத்தில் எங்கே செல்வர்?

   ______________________________.

புள்ளிகள் 10

## 10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15